# இயேசு தாழ்மையோடு சேவைபுரிந்தே புதிய தலைவர்களைப் பயிற்றுவித்தார்

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, இயேசு தமது சீஷர்களின் கால்களைக் கழுவி ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தது போல பிறருக்குத் தாழ்மையோடு சேவை புரிய குழந்தைகளுக்கு உதவி செய்வீராக!"

பிள்ளைகளின் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ப **நடவடிக்கைகளைத்** தெரிந்து கொள்க.

பிறருக்குத் தாழ்மையாக எவ்வாறு சேவை செய்வது என்று இயேசு தமது சீஷர்களைப் பயிற்றுவித்த கதையை ஒரு பெரிய பிள்ளையோ ஆசிரியரோ **யோவான் 13:1-17** லிருந்து வாசிக்கவும் அல்லது கூறட்டும்.

**விளக்குக:**

- தமது முன் மாதிரியைக் கொண்டே தமது சீஷர்களை இயேசு பயிற்றுவித்தார்.
- இயேசு அவர்களுக்கு ஒரு தாழ்மையுள்ள பணியாளனைப் போல சேவித்து, பிறருக்கு எவ்வாறு சேவை செய்வது என்று காட்டினார்.

**கேள்விகள்** (பதில் கேள்விகளுக்குப் பின்)

- இயேசு எவ்வளவு காலம் தமது சீஷர்களிடம் அன்பு வைத்தார்? (யோவான் 13:1)
- இயேசு தமது சீஷர்களுக்கு எவ்வாறு சேவை செய்தார்? (5).
- யூதாஸ் தன்னைச் சீக்கிரமாகக் காட்டிக் கொடுப்பான் என்பது இயேசுவுக்குத் தெரியுமா? (11).
- ஒருவருக்கு ஒருவர் தாழ்மையோடு சேவை செய்ய இயேசு தலைவர்களை எவ்வாறு பயிற்றுவித்தார்? (15).
- நாம் பிறருக்குத் தாழ்மையோடு சேவை செய்யும்போது தேவன் நமக்கு என்ன செய்வார்? (17).

இயேசு மற்றவர்களின் பாதங்களைக் கழுவும் காட்சியை **நாடகமாக்குக.** (யோவான் 13:1-17). சபைத்தலைவரோடு பேசி பிள்ளைகள் இந்த நாடகத்தை அரங்கேற்ற ஏற்பாடு செய்க. உங்கள் போதனை நேரத்தை உபயோகித்துப் பிள்ளைகள் இந்த நாடகத்தை ஆயத்தம் செய்ய உதவுங்கள். எல்லா பகுதியையும் பயன்படுத்தத் தேவை இல்லை. பெரிய பிள்ளைகளுக்கு சிறியவர்கள் ஆயத்தம் செய்வதில் உதவட்டும்.



ï **இயேசு, பேதுரு, கதை கூறுபவர்** ஆகிய வேடங்களை **பெரிய பிள்ளைகள்** அல்லது **பெரியவர்கள்** ஏற்கட்டும். இயேசு ஒரு துண்டையும், தண்ணீர் கோப்பையையும் வைத்துக் கொள்ளட்டும்.

- சிறிய பிள்ளைகள், யூதா மற்றும் சீஷர்களின் வேடத்தை ஏற்கலாம்.

**கதை கூறுபவர்:** யோவான் 13:1-7 ல் இருந்து இயேசு மற்றவர்களின் பாதங்களைக் கழுவும் கதையின் முதற் பகுதியைக் கூறட்டும். பின் கூற வேண்டியது: "இயேசு கூறுவதைக் கேளுங்கள்."

**இயேசு** : எழுந்து நின்று துண்டை இடுப்பில் கட்டிக் கொள்ளவும். பின் பேதுருவுக்கு முன் முழங்கால் ஊன்றி நின்று பாதங்களைக் கழுவுதல். கூறுவது: "நான் உங்கள் அனைவரையும் அதிகமாக நேசித்திருக்கிறேன். சீக்கிரமாக நான் இந்த உலகத்தை விட்டு நீங்கி பரலோகத்தில் இருக்கும் என் பிதாவிடம் போவேன்."

**சீஷர்கள்** : இது போல் பலரும் சத்தமிட்டுக் கூறுதல்: "இல்லை!" "நீர் எங்களை விட்டுப் போகக் கூடாது!" "போக வேண்டாம்!"

**இயேசு** : "நான் இப்போது உங்களுக்குக் கற்றுத்தர வேண்டிய சில விஷயங்கள் உண்டு!" (பேதுருவின் பாதங்களைக் கழுவ ஆரம்பிக்கிறார்).

**சீஷர்கள்** : இதுபோல் பலரும் கத்திக் கூறுதல்: "ஓர் அடிமையைப் போல இயேசு ஏன் நமது பாதங்களைக் கழுவ வேண்டும்?" "அவர் நமது எஜமானர்!" "அவர் நமது வேலைக்காரர் அல்ல!" "அவர் இவ்வாறு செய்யக் கூடாது!"

**கதை கூறுபவர்:** "பேதுரு என்ன சொல்லுகிறான் என்று கேளுங்கள்."

**பேதுரு** : "இயேசுவே! வேண்டாம்! நீர் ஏன் என் பாதத்தைக் கழுவுகிறீர்? நீர் எனது எஜமானர்!"

**இயேசு** : "நான் யாரிடத்தில் அன்பாய் இருக்கிறேனோ அவர்களுக்கு சேவையும் செய்கிறேன். நான் உன்னை சுத்திகரிப்பது உனக்கு அவசியமாய் இருக்கிறது."

**கதை கூறுபவர்:** யோவான் 13:8-17 ல் இருந்து கதையின் இரண்டாவது பகுதியைக் கூறவும். பின் கூறுவது: "பேதுரு என்ன கூறுகிறான் என்று கேளுங்கள்."

**பேதுரு** : "அப்படியானால் என் கையையும் என் தலையையும் கூட கழுவும்!"

**இயேசு** : "இல்லை. உனக்குத் தேவையானவற்றை நான் செய்தேன். இருந்தாலும் உங்களில் எல்லோரும் சுத்தமாக இல்லை. உங்களில் ஒருவனுடைய இருதயத்தில் சுத்தம் இல்லை."

**சீஷர்கள்** : இவ்வாறாகக் கூறுகிறார்கள். "அவர் எதைக் குறிப்பிடுகிறார்?" "யாருக்கு சுத்தமான இருதயம் இல்லை?"

**யூதாஸ்** : பார்வையாளர்களின் பக்கமாக வந்து அவர்களிடம் கூறுகிறான், "நான் எதிர்பார்த்தபடி இயேசு நம்மை ரோம அரசாங்கத்தின் பிடியில் இருந்து விடுவிக்கவில்லை. நான் அவரை அவரது எதிரிகளிடம் விற்று விடுவேன்." (போகிறான்).

**இயேசு** : "நான் உங்கள் போதகரும் கர்த்தருமாய் இருக்கிறேன். ஆனாலும் நான் உங்கள் பாதங்களை ஒரு வேலைக்காரனைப் போல கழுவினேன். நீங்களும் ஒருவருக்கு ஒருவர் இவ்வாறே செய்ய வேண்டும். நீங்கள் ஒருவருக்கொருவர் தாழ்மையோடு சேவை செய்ய வேண்டும். அப்போது நான் உங்களை ஆசீர்வதிப்பேன்."

**பேதுரு** : "நீர் உமது சொந்த முன் மாதிரிகளின் மூலம் நன்றாக போதிக்கிறீர். நாங்கள் ஒரு நாளும் மறக்க மாட்டோம்!"

**கதை கூறுபவர்:** நாடகத்துக்கு உதவிய யாவருக்கும் நன்றி கூறுதல்.

**கேள்விகள்:** பிள்ளைகள் இந்த நாடகத்தை பெரியவர்களுக்கு நடித்துக் காட்டினால் கூடவே மேலே பட்டியல் இடப்பட்டுள்ள கேள்விகளையும் கேட்கவும்.

**மனப்பாடம்:** 1 பேதுரு 5:5

**கேளுங்கள்:** எந்தெந்த வழிகளில் நாம் மக்களுக்கு தாழ்மையோடு சேவை செய்ய முடியும்? (பிள்ளைகள் உதாரணம் தரவும்).



**விளக்குக:** ஒரு பாவியாகிய பெண் தன் காலை கண்ணீரால் கழுவி தன் முடியால் துடைக்க இயேசு அனுமதித்தார். இது ஒரு பரிசேயன் வீட்டில் நடந்தது. அவன் இயேசு இவ்வாறு அனுமதித்ததற்காக கேலி செய்தான். அதிகமாக மன்னிக்கிறவர்கள் அதிகமாக அன்பு செலுத்துகிறார்கள் என்று இயேசு பதிலளித்தார். அவர் அவளது பாவங்களை மன்னித்தார் (லூக். 7:37-48).



பாதங்களின் படத்தை **வரைக.** இந்தப் படத்தை ஆராதனையின் போது பிள்ளைகள் பெரியவர்களுக்கு காட்டி, ஒருவருக்கொருவர், இயேசு தமது சீஷர்களின் கால்களைக் கழுவியது போல தாழ்மையோடு சேவை செய்ய வேண்டும் என விளக்கவும்.

நான்கு சிறுவர்கள் பிலி. 2:3-8 ஐ **ஒப்புவிக்கவும்.**

**ஜெபம்:** "இயேசுவே, நீரே எங்கள் கர்த்தரும், போதகருமானவர். நீர் பிறருக்குத் தாழ்மையோடு சேவை புரிந்ததால் நாங்கள் உம்மைப் போற்றுகிறோம். உமது முன் மாதிரியை பின்பற்ற எங்களுக்கு உதவுவீராக. பிறருக்கு சேவை செய்யவும் எங்களுக்கு உதவுவீராக."